**கொத்மலே பிரதேச சபை**
**நுவரெலியா மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மே 06 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை மற்றும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 29 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கொத்மலே பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டில் நன்கொடை பெறுவனவாக கிடைத்திருந்த 3 கணனி தொகுதிகள் மற்றும் நிழற்பிரதியெடுக்கும் என்பவற்றின் பெறுமதி இனங் காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்பட வேண்டும். | தற்போதய சந்தைப் பெறுமதி உறுதிப் படுத்தப்பட்டு கணக்கீடு செய்யப்படும். |
| (ii) | மோட்டார் வண்டி மற்றும் வண்டில்கள் அட்டவணையில் உள்ளடக்கப்பட்ட கெப் வண்டியின் பெறுமதி இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை | பெறுமதி பெற்றுக் கொள்ளப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும் | திருத்தங்களின் பின்னர் மதிப்பீடொன்று பெற்றுக் கொள்ளப்பட்டு எதிர்காலத்தில் கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். |
| (iii) | மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை வருமானத்தில் தவறுதலாக பட்டியலிடப்பட்டமை | தவறான பட்டியலிடல் புத்தகங்களிலிருந்து நீக்க நடவடிக்கை | 2019 ஆண்டில் சீராக்கப்படும். |

| | |
|---|---|
| காரணமாக பதிவழிப்பதற்காக கோரப்பட்டுள்ள ரூபா 162,310 மீதியும் உள்ளடக்கப்பட்டிருந்தது. | எடுக்கப்பட வேண்டும். |

**(ஆ) இணக்கம் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தயாரிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படும் 03 கணக்கு மீதிகளின் பெறுமதி அக்கணக்கு மீதிகளுக்குரிய பட்டோலைகளுடன் ஒப்பிட்ட போது ரூபா 17,831 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது. | மீதிகள் ஒப்பிடப்பட்டு சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | எதிர்காலத்தில் சீர்செய்வதற்கு நவடிக்கை எடுக்கப்படும் |

**(இ) கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகளின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| உரித்துறுதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமை காரணமாக ரூபா 72,285,221 தெகையான காணி மற்றும் கட்டிடங்களின் உரித்து உறுதிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | உரித்துறுதி பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உரித்துறுதி பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வேண்டும். |

**(ஆ) பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**(i) பெற வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஒரு வருடத்தை விஞ்சிய காலம் கடந்திருந்த பெறவேண்டிய 02 | பெறவேண்டிய மீதிகளை அறவிடுதற்கு நடவடிக்கை | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் |

| | | |
|---|---|---|
| கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 8,121,916 ஆக இருந்தது. | எடுத்தல் மற்றும் போலயான மீதிகள் காணப்பட்டால் ஆராய்ந்து தீர்வுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | |

**(ii) செலுத்த வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 ஆண்டிற்கு மேற்பட்டுள்ள காலம் கடந்துள்ள 02 செலுத்த வேண்டிய கணக்கு மீதிகள் ரூபா 15,857,532 ஆக இருந்தது. | செலுத்தவேண்டிய மீதிகள் தீர்வு செய்யப்பட நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் |

## 1.4 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணகள் முகாமைத்துவ தீர்மபனங்களுடன் இணங்காமை கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங் களுடனான தொடர்பு | | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2000 இன் 53 மற்றும் 1988 இன் 56 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தம் செய்யப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச் சட்டம | மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் சுற்றாடல் அனுமதிப்பத்திரங்கள் வழங்குதல் நிராகரிக்கப் பட்டிருக்கையில் சட்ட விரோதமாக சபையால் மாடுகள் கொலைக்களம் நடாத்திச் செல்லப்பட்டிருந்தது. | சட்டரீதியாக்கு வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கொலைக்கள கட்டளைச் சட்டத்தின் நியதிகளின் பரிகாரம் செல்லுடியான வியாபார அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. |
| (ஆ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) 218 விதி | சபைக்குச் சொந்தமான சகல காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக கணிப்பீடொன்று பேணப்படாமல் இருந்ததுடன் | கணிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | 2019 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | நிதிப்பிரமாணம் 104 | சபைக்குரிய முச்சக்கர வண்டியொன்று விபத்திற்குட்பட்டு ரூபா 34,440 ஆன திருத்தமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் அது தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் பரிசோதனையொன்ற நடாத்தப்படவில்லை. | நிதிப் பிரமாணம் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் ஆராய்ச்சி நடவடிக்கைகளை நடாத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஈ) | 1988 மே 17 ஆந் திகதிய 1988/22 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கை | வீதிவரி அறவீட்டுக்காக ஆதனங்களின் மதிப்பீடு 05 ஆண்டுகளுக்கு ஒரு முறை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் ஆதனங்கள் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | தற்போது மதிப்பீடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 25,390,070 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 17,290,001 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வருமானம் | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 4,229,000 | 4,404,781 | 3,217,500 | 1,187,281, | 4,142,000 | 4,468,779 | 4,038,161 | 2,144,546 |
| வாடகை | 3,960,000 | 3,706,357 | 3,596,357 | 110,000 | 3,990,000 | 3,582,536 | 5,450,203 | 196,775 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 9,304,000 | 3,317,119 | 3,317,119 | - | 6,940,000 | 5,523,998 | 5,523,998 | - |
| ஏனைய வருமானம் | 15,968,000 | 21,590,999 | 21,590,999 | - | 11,800,000 | 3,592,926 | 6,573,310 | 1,860,153 |
| மொத்தம் | 33,461,000 | 33,019,256 | 31,721,975 | 110000 | 26,872,000 | 17,168,239 | 21,585,672 | 4,201,474 |

### 2.2.2 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 2,015,988 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் ரூபா 8,679,890 ஆன முத்திரைக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | குறித்த தொகையை அறவிட்டுக் கொள்ள வேண்டும். | ஒரு பகுதி அறவிடப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் பணத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

நகர சபைகள் அதிகாரச்சட்டத்தின் 4ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

#### (அ) கழிவுப்பொருள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபை அதிகாரப் பிரதேசத்தில் சேகரிக்கப்படும் | முறையான கழிவுப்பொருள் வகையில் கழிவுப் பொருட்கள் | சட்டரீதியாக காணி கையேற்கப்பட்டதன் முறைப்படுத்த |

| | | | |
|---|---|---|---|
| | கழிவுப்பொருள் வெளியேற்றப்படும் கொஸ்கஹபத்தன மற்றும் ஹபுகஸ்தவாவ கழிவு பொருள் அகற்றும் இடங்களில் திறந்த வெளியில் கழிவுகள் இடப்பட்டிருந்தமை மற்றும் பொலித்தீன் உட்பட கழிவுப்பொருள் முறையாக அகற்றுதல் இடம்பெறாமை அவதானிக்கப்பட்டது. | முகாமைத்தவம் தயாரிக்கப்பட வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | 2018 ஆகஸ்ட் 09 ஆந் திகதி வரையிலும் பிரதேச சபை யின் புதிய இரண்டு மாடிக் கட்டிடத்தின் முதலாவது கட்ட நிர்மாணத்திற்காக ரூபா 11,112,792 தொகை செலவிடப்பட்டிருந்தது. சபையிடம் போதியளவு நிதியம் காணப்பட்ட போதும் எஞ்சிய வேலைப் பகுதிகளின் நிர்மாணம் 2019 ஏப்ரல் வரையிலும் ஆரம்பிக்கப் பட்டிருக்கவில்லை | நிர்மாணத்தை துரிதமாக பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யபடும் |

**3.2 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக நகர சபை போதியளவில் அறிந்திருக்கா திருந்ததுடன் மீளாய்வாண்டில் அது தொடர்பாக திட்டவட்டமான செயற்பாடுகள் நிறைவேற்றப் பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை நிறைவேற்றவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இது தொடர்பாக விசேட கவனம் செலுத்த நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ரம்பொடை நீர்வீழ்ச்சியை பார்வையிடுவோருக்காக ஆரோக்கிய வசதிகள் 2017 ஒக்தோபர் மாதத்தின் போது ரூபா 55,000 கொடுப்பனவு செய்து 02 மலக் கழிவுகளை அகற்றும் தாங்கிகள் (Septic Tank) கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், அத்தாங்கி உரிய இடத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | விரைவில் நிர்மாணத்தை புர்த்தி செய்து தாங்கி நிறுவப்பட வேண்டும். | புதிய மலசலகூட முறைமையொன்றை நிர்மாணிக்க திட்டமிடப்பட்டுள்ளது. அதன் பின்னர் தாங்கி நிறுவப்படும் |
| (ஆ) | பிரதேச சபையால் செயற் படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட ராகல்கொட மற்றும் ஷீன் நீர்செயற்திட்டங்களுக்காக 2017 ஆம் ஆண்டின் போது முறையே ரூபா 1,897,315 மற்றும் ரூபா 1,083,915 செலவிடப்பட்டு நீர்க்குழாய்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதும் உரிய நீர் முன்மொழிவுத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை . | விரைவில் செயற்திட்டத்தை பூர்த்தி செய்யப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நீர் தாங்கி நிர்மாணித்து நீரை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் |
| (இ) | 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 859,070 செலவினம் மேற்கொண்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த தவலந்தன்ன பொது மலசல கூடத்திற்கு நீர் வசதிகள் வழங்காமையால் பன்படுத்த முடியாமல் இருந்தது. | துரிதமாக செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக |

## 3.2 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 08 பதவிகளில் 32 வெற்றிடங்கள் காணப்பட்டன. | உரிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை வேண்டும் | ஆட்சேர்க்க அனுமதி கோரப்பட்டுள்ளது. |

### 3.5 சொத்துக்களின் முகாமைத்துவம்

### 3.5.1 விளைவற்ற சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | கொத்மலே புதிய நகரில் தற்போதுள்ள பலவருடங்கள் பழமையான வாரச்சந்தையை நடாத்துவதற்கு நிர்மாணிக்கப்பட்ட சில கட்டிடங்கள் மற்றும் பொது மலசலகூடம் புற்கள் வளர்ந்து விளைளவற்றுக் காணப்பட்டன. | தேவையான மேம்படுத்தல்களை செய்து செயற் திறனாக பயன்படுத்த வேண்டும். | எதிர்கால அபிவிருத்தியன் போது ஆக்கபூர்மாக பயன்படுத்தக்கூடிய வகையில் நடவடிக்கை எடுக்கப்படும் |
| (ஆ) | பெறுமதி சமர்ப்பிக்கப்படாத மோட்டார் வண்டி 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாகவும் ரூபா 621,552 பெறுமதியான 02 வாகனங்கள் 07 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக திருத்தம் செய்யப்படாமல் அல்லது பொருத்தமான நவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பொருத்தமான வகையில் கைதவிர்க்க அல்லது திருத்தம் செய்யப்பட வேண்டும். | தேவைலான செயற்பாடுகளை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 193 இன் பிரகாரம் பாதிடப்பட்ட நிதி ஏற்பாடு மற்றும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினம் என்பனவற்றிற்கு இடையில் உள்ள வேறுபாடு தொடர்பான விடயங்களை விளக்குவதற்கான கூற்றொன்று சமர்ப்பிக்கப் பட்டிருக்க வில்லை. | உரிய விதிகளின் படி விலகல் தொடர்பாக விடயங்கள் தெளவுபடுத்தும் கூற்றொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் பாதீடு கட:டுப்படுத்துமென |